Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 244 உள்ளூர் - 01.09.2026 செவ்வாய்க்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 244 வெளியூர் - 02.09.2026 புதன்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**கிருஷ்ண ஜெயந்தி: 6 ராசிகளுக்கு அதிர்ஷ்டம்!**

**இஸ்ரோவில் 175 விஞ்ஞானி / பொறியாளர் பணியிடங்கள்!**

**சுங்கச் சாவடிகளில் கட்டண உயர்வு!**

**சட்டசபையில் அமைச்சர்கள் அறிவித்த புதிய அறிவிப்புகள்...!**

# மோடி-புதின்ஜி ஜின்பிங் ஒரே மேடையில்! உலக அரசியலில் பரபரப்பு!




கிர்கிஸ்தான், செப். 01–

கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெ க்கில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) உச்சி மாநாடு தொடங்கியது.இதில் பிரதமர் நரேந்திர மோடி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின், சீன அதிபர் ஜி ஜின்பிங் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர். மோடிபுதின் சந்திப்பில் உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்த வேண்டும் என மோடி வலியுறுத்தினார். மேலும், செப்டம்பர் 1213–ல் டெல்லியில் நடைபெறும் BRICS உச்சி மாநாட்டில் புதினுக்கு அழைப்பு விடுத்தார். இந்தியாரஷ்யா உறவு புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக புதின் பாராட்டு தெரிவித்தார்.

உலக நாடோடிகள் விளை யாட்டுப் போட்டி தொடக்க விழாவுக்கு மோடியும் புதினும் ஒரே காரில் சென்றது கவனம் ஈர்த்தது. ஜி ஜின்பிங்கை மோடி சந்திக்கிறார்.



கிர்கிஸ்தான் தலைநகர் பிஷ்கெக்கில் உலக நாடோடிகள் விளையாட்டுப் போட்டி தொடங்கியது. இதன் தொடக்க விழாவில் பங்கேற்க இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினும் ஒரே காரில் சென்றனர்.

## உலகமே தள்ளாடுது... இந்தியா 7.8% வேகத்தில் பாயுது!




புதுடெல்லி, செப். 01–

உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற நிலை மற்றும் மேற்காசிய போர் பதற்றத்தையும் கடந்து, இந்தியாவின் ஜிடிபி 2026–27 ஏப்ரல்ஜூன் காலாண்டில் 7.8% வளர்ச்சி பெற்றுள்ளது. கடந்த ஆண்டு இதே காலாண்டில் 6.9% ஆக இருந்த வளர்ச்சி தற்போது உயர்ந்துள்ளது; ஜனவரிமார்ச் காலாண்டின் 8.6%–ஐ விட மட்டும் சற்று குறைவு.

நிலையான விலையில் உண்மையான ஜிடிபி ரூ.81.36 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. ரிசர்வ் வங்கி கணித்த 7%–ஐ விடவும் வளர்ச்சி அதிகமாக பதிவாகி, வேகமாக வளரும் முக்கிய பொருளாதாரமாக இந்தியா தனது இடத்தை தக்கவைத்துள்ளது. நடப்பு நிதியாண்டு முழுவதும் 6.7% வளர்ச்சி இருக்கும் என ரிசர்வ் வங்கி கணித்துள்ளது.

இந்த சாதனையை ''இமாலய சாதனை'' என பிரதமர் நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

# சென்னைக்கு 2-வது விமான நிலையம்: புதிய இடங்கள் ஆய்வு!



சென்னை, செப். 01–

சென்னையின் 2–வது விமான நிலையத்திற்காக பரந்தூர் திட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில், கும்மிடிப்பூண்டி, செய்யூர் உள்ளிட்ட மாற்று இடங்களை அரசு ஆய்வு செய்து வருகிறது. விவசாயிகள் பாதிப்பு குறைவாக இருக்கும் இடத்தை தேர்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், புதிய விமான நிலையம் அமையும் வரை பயணிகள் தேவையை சமாளிக்க மீனம்பாக்கம் விமான நிலையத்தில் புதிய டெர்மினல்–5 அமைக்கப்பட்டு, ஆண்டுக்கு கூடுதலாக 2 கோடி பயணிகளை கையாள திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதைய மற்றும் புதிய முனையங்கள் மூலம் மொத்த பயணிகள் கையாளும் திறன் ஆண்டுக்கு 5.5 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சிப் தயாரிப்பில் இந்தியா பாய்ச்சல்! ரூ.1.27 லட்சம் கோடி 'செமிகான் 2.0'



புதுடெல்லி, செப்.01–

செமிகண்டக்டர், கைப்பேசி உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை பெருக்க ரூ.1,27,500 கோடி மதிப்பிலான 'செமிகான் 2.0' திட்டத்துக்கான அறிவிக்கையை மத்திய அரசு வெளியிட்டது. சிப் வடிவமைப்பு, உபகரணங்கள்மூலப்பொருள்கள், உற்பத்தி, மேம்பட்ட பேக்கேஜிங்பரிசோதனை, ஆராய்ச்சிமேம்பாடு, திறன் மேம்பாடு என 6 முக்கிய துறைகளுக்கு திட்டம் செயல்படுத்தப்படும். செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியால் சிப்களுக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில், தற்சார்பு மற்றும் உலகளவில் போட்டியிடும் இந்திய செமிகண்டக்டர் தொழில்துறையை உருவாக்குவதே நோக்கம்.

இந்திய அல்லது வெளிநாடுவாழ் இந்தியர்களுக்குச் சொந்தமான ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கு மானியம், பங்கு முதலீடு மற்றும் ராயல்டி நிதியுதவி வழங்கப்படும். சிலிக்கான் உற்பத்தி ஆலைகளுக்கு 40%, டிஸ்ப்ளே உற்பத்திக்கு 35%, மேம்பட்ட பேக்கேஜிங்குக்கு 35%, பாரம்பரிய பேக்கேஜிங்குக்கு 25% வரை ஊக்கத்தொகை வழங்கப்படும்.

முதல் கட்டத்தில் 6 மாநிலங்களில் 12 செமிகண்டக்டர் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட நிலையில், மைக்ரான், கெய்ன்ஸ் செமிகான், சிஜி செமி உள்ளிட்ட ஆலைகளில் வணிக சிப் உற்பத்தி ஏற்கெனவே தொடங்கியுள்ளது.

# பெங்களூரு டபுள் டெக்கர் ரயில் திட்டம்: அதானி வெற்றி!



பெங்களூர், செப். 01–

பெங்களூருவின் பென்னிகனஹள்ளிசிக்கபனவரா Mallige Line வழித்தடத்தில் 7.8 கி.மீ. நீளமுள்ள ₹671.65 கோடி மதிப்பிலான டபுள் டெக்கர் மேம்பால ரயில் திட்டத்தை, ₹665.61 கோடிக்கு அதானி குழுமத்தின் கெம்இந்தியா ப்ராஜெக்ட்ஸ் குறைந்தபட்ச ஏலத்தில் வென்றுள்ளது; ₹759.05 கோடிக்கு ஏலம் கோரிய Rail Vikas Nigam 2–வது இடம் பிடித்தது.

முக்கிய அம்சங்கள்: மதிகெரே யஷ்வந்த்பூர் மோகன் குமார் சாலை பகுதியில் 1.2 கி.மீ. டபுள் டெக்கர் கட்டமைப்பு, கீழ்தளங்களில் சாலை, மேல்தளத்தில் இரட்டை ரயில் பாதை, வாகன ரேம்ப் மற்றும் மதிகெரே பகுதியில் புதிய ரயில் நிலையம் அமைக்கப்பட உள்ளது.

இதற்கு முன்பும் சில்க் போர்டு ஹெப்பால் 16.75 கி.மீ. சுரங்கச் சாலை திட்டத்தின் இரு பிரிவுகளிலும் அதானி குழுமம் குறைந்தபட்ச ஏலத்தை பெற்றுள்ளது. இந்நிலையில், ஆகஸ்ட் 23–ல் அதானி தலைவர் கௌதம் அதானி, கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமாரை சந்தித்தது விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது; அந்த சந்திப்பு மரியாதை நிமித்தமானது என சிவகுமார் தெரிவித்தார்.

அதானி குழுமம் ITD Cementation India–வின் 67.46% பங்குகளை கைப்பற்றிய பின்னர், அந்நிறுவனம் கெம்இந்தியா ப்ராஜெக்ட்ஸ் என்ற பெயரில் EPC மற்றும் கட்டுமானத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

# மேட்டூர் அணை திறப்பு!

# டெல்டாவுக்கு பாசன நீர் திறந்தார் விஜய்! 17.10 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்!

## 91.15 அடியாக அணை நீர்மட்டம்!!








சேலம், செப். 01–

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கான நீரை தமிழக முதல்வர் விஜய் திறந்து வைத்தார். இதன் மூலம் டெல்டா மாவட்டங்களில் உள்ள 17.10 லட்சம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெற உள்ளன. மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் 12–ம் தேதி டெல்டா பாசனத்துக்கு நீர் திறப்பது வழக்கம். ஆனால், நடப்பாண்டில்அணையின் நீர்மட்டம் போதிய அளவில்இல்லாததால், வழக்கமான காலத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை. பாசனத்துக்கு நீர் திறக்க குறைந்தபட்சம் 90 அடி நீர்மட்டம் இருக்க வேண்டும். இந்நிலையில், செப். 1–ம் தேதி காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 91.15 அடியாகவும், நீர் இருப்பு 53.97 டி.எம்.சி.யாகவும் இருந்தது. அணைக்கு வரும் நீர்வரத்தும் வினாடிக்கு 11,501 கனஅடியாக அதிகரித்தது. சென்னையில் இருந்து விமானம் மூலம் சேலம் வந்த முதல்வர் விஜய், அங்கிருந்து மேட்டூர் சென்றார். வழியெங்கும் திரண்டிருந்த மக்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கான நீரை அவர் திறந்து வைத்தார்.

முதல்வரின் வருகையையொட்டி மேட்டூரில் 3,804 போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# சட்டசபையில் அமைச்சர்கள் அறிவித்த புதிய அறிவிப்புகள்...!





தமிழக சட்டசபையில் துறை வாரியாக மானிய கோரிக்கைகள் நடைபெற்று வரும் நிலையில் இன்று புதிய அறிவிப்புகளை அமைச்சர்கள் அறிவித்தனர். கதர் மற்றும் கிராம தொழில்கள் துறை அமைச்சர் விஜய் பாலாஜி அறிவித்த புதிய அறிவிப்புகள்:–

1) திருச்சி, சேலம் மற்றும் தஞ்சாவூர் கதர் அங்காடிகள் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

கதர் அங்காடிகள் ''கதர் வாரியத்தின் முகம்'' என்பதை கருத்தில் கொண்டு அவற்றை நவீனப்படுத்துவது அவசியமாகும். அதன்படி ஏற்கனவே திருச்சி, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகரங்களில் இயங்கும் கதரங்காடிகள் புதிய வடிவமைப்பு மற்றும் உட்புற அலங்காரங்களுடன் கூடிய நவீன அனுபவ அங்காடியாக ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்படும்.

2) கதர் மற்றும் பட்டு உற்பத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதி பங்குத் தொகை 12 சதவீதத்திலிருந்து 16 சதவீதமாக உயர்த்தப்படும்.

3) திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனா மரத்தூரில் ஜவ்வாது மலைத்தேன் அலகு ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய கதர் ஆணை குழு உதவியுடன் அமைக்கப்படும்.

4) திருநெல்வேலி மாவட்ட பனை பொருட்கள் விற்பனை கூட்டுறவு சம்மேளனத்தின் தூத்துக்குடி தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் வள்ளியூர் பனை பொருட்கள் இருப்பு கிடங்கு ஆகியவை ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

5) தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை இணையத்திற்குச் கூட்டுறவு சொந்தமான இடங்களில் 10 விற்பனை அங்காடிகள் ரூபாய் 80 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் முகமது பர்வேஸ் புதிய அறிவிப்புகள்...

1) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல பதிவு செய்துள்ள வாரியத்தில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய சிறப்பு கட்டுமானத் திறன் பயிற்சி வழங்க 5 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 76 கோடியே 46 இலட்சம் ரூபாய் செலவில் ''கட்டுமானத் தொழில் திறன்மிகு மையங்கள்'' நிறுவப்படும்.

2) தமிழ்நாடு தொழிலாளர்களின் கட்டுமானத் திறமையை ஊக்குவிக்கும் வகையில், மாநில மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு கட்டுமானத் தொழிற்பிரிவுகளில் போட்டிகள் நடத்தி முதல் மூன்று இடங்களை பெறும் வெற்றியாளர்களுக்கு ஆண்டுதோறும் ''முதலமைச்சரின் கட்டுமானத் தொழிலாளர் வெற்றி விருதுகள்'' பரிசுத்தொகையுடன் வழங்கப்படும்.

3) தமிழ்நாட்டு இளைஞர்கள் அதிக அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பினை பெறுவதற்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் மூலம் மாவட்டந்தோறும் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதற்கான நிதியினை 3 கோடியே 4 இலட்சம் ரூபாயிலிருந்து 3 கோடியே 72 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

4) பெருநகரங்ளுக்கு வேலை தேடி வரும் கட்டுமானத் தொழிலாளர்கள் பாதுகாப்பான முறையில் தங்குவதற்காக அடிப்படை வசதிகளுடன் கூடிய இடை நேர தங்குமிடங்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூர் பெருநகரங்களில் 14 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

5) பதிவு பெற்ற 1000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு சர்வதேச தரத்திலான சிறப்பு திறன் பயிற்சி அளித்து, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பெற வழிவகை செய்யும் பொருட்டு ''அயலகம் செல்லும் தமிழ்நாடு கட்டுமான வெற்றி கரங்கள்'' திட்டம் 15 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

6) தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் (GIG) தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள கிக் தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் நோக்கில் 10 இலட்சம் ரூபாய்க்கான விபத்துக் காப்பீடு வழங்கப்படும்.

7) தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட 1000 தொழிலாளர்களுக்கு, இ–பைக் வாங்குவதற்கு வங்கி மூலம் பெறப்படும் கடனுக்கான வட்டியை அரசே ஏற்கும்.

8) தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் தானியங்கி மோட்டார் மற்றும் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களில், 1000 தொழிலாளர்களுக்கு புதிதாக எலக்ட்ரிக் ஆட்டோ வாங்கிட 50 சதவீத மானியத் தொகை அதிகபட்சமாக 75 ஆயிரம் ரூபாய் வரையிலும் மற்றும் 1000 தொழிலாளர்களுக்கு பயன்பாட்டில் இருக்கும் ஆட்டோக்களை சி.என்.ஜி முறைக்கு மாற்றுவதற்கு 50 சதவீத மானியத் தொகை அதிகபட்சமாக 30 ஆயிரம் ரூபாய் வரையிலும் வழங்கப்படும்.

9) கட்டுமானத் தொழிலாளர்களின் திறனை மேம்படுத்தி வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் வகையில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கட்டுமான வேலை, தச்சு வேலை, மின்பணியாளர் வேலை, பிளம்பர், வர்ணம் பூசுதல் வேலை உள்ளிட்ட பல தொழில் இனங்களில், நாள் ஒன்றுக்கு 800 ரூபாய் ஊதிய இழப்பீட்டுத் தொகையுடன் கூடிய ஏழு நாட்கள் திறன் மேம்பாட்டு பயிற்சி,50,000 தொழிலாளர்களுக்கு 48 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

10) கட்டுமானத்தொழிலாளர்களுக்கு செயல்முறை பயிற்சி மூலம் பாதுகாப்பு விழிப்புணர்வினை மேம்படுத்தி விபத்துக்களை தடுக்கும் பொருட்டு, பாதுகாப்புமாதிரிகள் மற்றும் சுயபாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய இரண்டு நடமாடும் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி மையங்கள் 2 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

11) தமிழ்நாடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியத்தின் சேவைகளை திறம்பட வழங்கும் பொருட்டு இவ்வாரியத்தின் மறுசீரமைப்பு இணையதளம் செய்யப்படும்.

12) ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் முதுகலை ஆசிரியர் தேர்வு மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் ஒருங்கிணைந்த தொழில்நுட்பப் பணிகள் தேர்வுகளுக்குத் தயாராகும் தேர்வர்களுக்கு மென்பாடக் குறிப்புகள் வழங்குவதற்காக, மெய்நிகர் கற்றல் வலைதளத்திற்கான வருடாந்திர நிதி ஒதுக்கீடு 15 68 இலட்சத்து ஆயிரம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

13) கட்டுமானத் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், அவர்கள் அன்றாடப் பணி தொடர்பாக அதிக அளவில் காலையில் கூடி காத்திருக்கும் இடங்களில், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் வாரியத்தின் இணையதள சேவைகளை வழங்கும் வகையில் 50 வசதி மையங்கள் அமைக்கப்படும்.

14) அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணிபுரியும் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் 1 கோடி ரூபாய் செலவில் உயர் தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும்.

15) ''ஐடிஐ வெளிநாட்டு வேலைவாய்ப்பு வெற்றி திட்டம்'' மூலம் அரசு தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பை உறுதி செய்ய 7 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த பயிற்சி வழங்கப்படும்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 01.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 15-ம் தேதி

# பாக்கெட் உணவில் ஆபத்து! உச்சநீதிமன்றம் சாட்டையடி!




நாம் அன்றாடம் வாங்கி உண்ணும் பாக்கெட் உணவுகள் உண்மையில் எவ்வளவு பாதுகாப்பானவை? இந்தக் கேள்விக்கு விடை தேடும் நிலைக்கு இந்தியா தள்ளப்பட்டுள்ளது. நீரிழிவு, உடல் பருமன் உள்ளிட்ட தொற்றா நோய்கள் அதிகரித்து வரும் நிலையில், அதிக சர்க்கரை, உப்பு, கொழுப்பு கொண்ட உணவுப் பொருட்கள் குறித்து நுகர்வோருக்கு வெளிப்படையான எச்சரிக்கை வழங்குவது அவசியமாகியுள்ளது.

பாக்கெட்டின் பின்புறத்தில் சிறிய எழுத்துகளில் தகவல்களை மறைப்பதற்குப் பதிலாக, முன்புறத்திலேயே எளிதில் புரியும் வகையில் ''சர்க்கரை அதிகம்; உப்பு அதிகம்; கொழுப்பு அதிகம்'' என்ற எச்சரிக்கை இடம்பெற வேண்டும் என்பதே சமூக நல ஆர்வலர்களின் கோரிக்கை.

இதுதொடர்பாக உச்சநீதிமன்றம் FSSAI–யை நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்திய நிலையில், அதன் முன்மொழிவுகள் மீண்டும் பல கேள்விகளை எழுப்பியுள்ளன. குறிப்பாக, கார்ப்பரேட் நிறுவனங்களின் அழுத்தத்திற்கு FSSAI ஆளாகிறதா என்ற நீதிமன்றத்தின் கடுமையான கேள்வி, சாதாரணமானதல்ல.

இந்தியாவில் 10 கோடிக்கும் அதிகமானோர் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் நிலையில், பொதுமக்களின் உடல்நலத்தைவிட உணவு நிறுவனங்களின் வணிக நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படக் கூடாது.

ஒரு பொருளில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆபத்தான ஊட்டச்சத்துகள் இருந்தால்தான் எச்சரிக்கை என்ற விதி, நுகர்வோரை குழப்பக்கூடும். 'மொத்த சர்க்கரை'க்கு பதிலாக 'சேர்க்கப்பட்ட சர்க்கரை' மட்டும் கணக்கிடுவது, HFSS வரையறையைச் சேர்க்காதது, எச்சரிக்கை எழுத்துகளின் அளவு சிறியதாக இருப்பது போன்ற குறைபாடுகளும் சரிசெய்யப்பட வேண்டும்.

உணவு என்பது வணிகப் பொருள் மட்டுமல்ல; அது மக்களின் உயிருடன் தொடர்புடையது. எனவே, FSSAI இனியும் காலதாமதம் செய்யாமல், வெளிப்படையானதும் வலுவானதுமான முன்புற எச்சரிக்கை லேபிள் முறையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

பொதுமக்களின் உடல்நலத்தைப் பாதுகாப்பதே முதன்மை. கார்ப்பரேட் நிறுவனங்களின் வசதிக்காக விதிகள் வளைக்கப்படக் கூடாது. வரும் செப்டம்பர் 10–ஆம் தேதி நடைபெறும் விசாரணையில், இந்த விவகாரத்திற்கு தெளிவான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

# உஷார்!! முதல்வர் விஜய்யின் பெயரில் சமூக ஊடகங்களில் மோசடி!

சென்னை, செப். 01–

மத்திய பிரதேசத்தில் முதல்வர் விஜய்யின் அறக்கட்டளை என்ற பெயரில் இணைய வழியில் பண மோசடி சம்பவம் நடைபெற்றுள்ளது.

தாங்கள் விஜய்யின் அறக்கட்டளையில் இருந்து பேசுவதாகவும், ஏழை எளிய மக்களுக்கு உதவ விரும்புவதாகவும் மத்திய பிரதேசத்தில் மோசடி கும்பல் கிளம்பியுள்ளது.

விஜய்யின் அறக்கட்டளையில் கல்விக் கடன்கள், தொழிற்கடன்கள், சுய உதவிக் குழுக்கள் மூலம் கடன் வழங்கப்படுவதாகவும் மக்களை மோசடி கும்பல் ஏமாற்றி, கடன்கள் வழங்குவதற்கு ஜிஎஸ்டி கட்டணம்,



சரிபார்ப்புக் கட்டணம், பதிவுக் கட்டணம் உள்ளிட்ட கட்டணங்கள் கட்ட வேண்டும் எனக் கூறி, ரூ. 1,000 முதல் ரூ. 50,000 வரையில் வசூலித்து ரூ. 10 லட்சம் வரையில் மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இதனையடுத்து, கட்டணம் செலுத்தியபிறகு, பணம் வாங்கியவர்களைத் தொடர்புகொள்ள முடியாமல், தாங்கள் மோசடிக்கு ஆளாக்கப்பட்டதை உணர்ந்த பொதுமக்கள், மோசடி கும்பல் குறித்து மாநில காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, இந்தூர் குற்றத் தடுப்புப் பிரிவில் வழக்குகள் பதிவுசெய்யப்பட்ட நிலையில், தற்போது தமிழக சைபர் காவல்துறையின் உதவியையும் கோரியுள்ளனர்.

# ஸ்மார்ட்போன் விலை குறையுமா? மத்திய அரசு ஆலோசனை!

இந்தியாவில் ஸ்மார்ட்போன் விற்பனை மந்தமடைந்துள்ள நிலையில், மொபைல் போன்களுக்கான 18% ஜி.எஸ்.டி. வரியை குறைப்பது குறித்து வரவுள்ள ஜி.எஸ்.டி. கவுன்சில் கூட்டத்தில் ஆலோசிக்கப்படலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

சிப்கள் உள்ளிட்ட உதிரிபாகங்களின் விலை உயர்வு காரணமாக செல்போ ன்களின் உற்பத்திச் செலவும், விலையும் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக ஏப்ரல் ஜூன் காலாண்டில் இந்திய ஸ்மார்ட்போன் விநியோகம் ஆண்டுக்கு ஆண்டு 10 முதல் 11 சதவீதம் வரை சரிந்துள்ளது. இது 6 ஆண்டுகளில் அந்தக் காலாண்டில் பதிவான



மிகப்பெரிய சரிவாகும்.

செல்போன் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் விற்பனையை ஊக்குவிக்கும் நோக்கில் ஜி.எஸ்.டி. குறைப்பு பரிசீலிக்கப்படுவதாக கூறப்படுகிறது. தற்போது மொபைல் போன்களுக்கு 18% ஜி.எஸ்.டி. விதிக்கப்படுகிறது. வரி குறைக்கப்பட்டால் செல்போன்களின் விலை குறைந்து, விற்பனை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. மேலும், ₹62,500 கோடி மதிப்பிலான மொபைல் போன் உற்பத்தித் திட்டத்துக்கும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக செய்தி தெரிவிக்கிறது. ₹10,000–க்கும் குறைவான பட்ஜெட் ஸ்மார்ட்போன்கள் சந்தையில் குறைந்துள்ள நிலையில், ஜி.எஸ்.டி. குறைப்பு அமலானால் மீண்டும் குறைந்த விலையில் செல்போன்கள் கிடைக்க வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

# முதல்வர் விஜய் பிரிட்டன் பயணம்?

சென்னை, செப். 01–

முதல்வர் விஜய் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக பிரிட்டன் செல்லவிருப்ப தாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாட்டின் மாநில தொழில் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புத் துறை அமைச்சராக கீர்த்தனா பதவி வகித்து வரும்நிலையில், வெளிநாடுகளில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக செப். 4 ஆம் தேதியில் தைவான் நாட்டுக்கு அமைச்சர் கீர்த்தனா பயணம் மேற்கொள்ளவுள்ளவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தைவான் நாட்டில் செப். 4–ல் செமிகண்டக்டர், ஏஐ சிப் உள்ளிட்ட துறைகள் தொடர்பாக செமிகான்



மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் அமைச்சர் கீர்த்தனா கலந்துகொள்வதுடன், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவிருப்பதாகக் கூறப்படுகிறது. அதுமட்டுமின்றி, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் விஜய்யும், செப். 10–ல் பிரிட்டனுக்கு பயணம் மேற்கொள்ளவி ருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொழிற்துறை அதிகாரிகளுடன் முதல்வர் விஜய், செப். 10–ல் பிரிட்டன் செல்லவிருப்பதாகவும், செப். 16 வரையில் சுற்றுப்பயணம் முக்கிய தொழில் நிறுவனங்களின் முதலீட்டாளர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முதல்வர் விஜய் அழைப்பு விடுக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதன் மூலம், முதல்வராகப் பதவியேற்றதிலிருந்து அரசுமுறை பயணமாக முதன்முறையாக முதல்வர் விஜய் வெளிநாடு செல்லவிருக்கிறார்.

# சுங்கச் சாவடிகளில் கட்டண உயர்வு!

சென்னை, செப். 01–

தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி உள்பட 25–க்கும் மேற்பட்ட சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு (செப். 1) முதல் அமலுக்கு வந்துள்ளது. தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் 60–க்கும் மேற்பட்ட சுங்கச்சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் ஆண்டுக்கு இரு முறை கட்டணத்தை மாற்றி அமைப்பது வழக்கம்.

வாகனங்களுக்கு ஏற்ப ஒரு வழிப் பயணம் மற்றும் மாதாந்திரக் கட்டணம் ரூ. 5 முதல் ரூ. 735 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. விக்கிரவாண்டி, செங்குறிச்சி, வாலாஜாபாத், சமயபுரம்,




திருச்சி, மதுரை உள்ளிட்ட சுங்கச்சாவடிகளில் வாகன வகையைப் பொறுத்து ரூ. 5 முதல் ரூ. 20 வரை கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

லாரிக்கு ரூ. 380 சுங்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டு வந்த நிலையில், ரூ. 20 வரை உயர்த்தப்பட்டு ரூ. 400 ஆக வசூலிக்கப்படுகிறது. பேருந்துக்கு சுங்கக் கட்டணம் ரூ. 240–லிருந்து ரூ. 250–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒருமுறை பயணிக்கும் லாரி, பேருந்து உள்ளிட்ட வாகனங்களுக்கு தற்போது வசூல் செய்யப்படும் கட்டணத்தில் இருந்து ரூ. 10, ஒரே நாளில் பலமுறை பயணிக்கும் லாரி, பேருந்துகளுக்கு தற்போது வசூல் செய்யப்படும் கட்டணத்தில் இருந்து ரூ. 15 உயர்த்தி வசூல் செய்யப்படுகிறது

சுங்கச்சாவடிகளின் கட்டண உயர்வு வாகன ஓட்டிகளை கவலையடையச் செய்துள்ளது.

# பழனி பாலசமுத்திரம் அகோபில வரதராஜ பெருமாள் கோவில் தேரோட்டம்!



பழனி செப். 01–

பழனி அருகே உள்ளது பாலசமுத்திரம். இங்கு அகோபில வரதராஜ பெருமாள் கோவில் உள்ளது. இந்த கோவில் பழனி முருகன் கோவிலில் உப கோவில் ஆகும். இங்கு ஆவணி மாத பிரம்மோற்சவ விழாவையொட்டி, கடந்த மாதம் 23ஆம் தேதி கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்கியது. கடந்த 29ஆம் தேதி திருக்கல்யாணம் நடைபெற்றது. நேற்று திருத்தேரோட்டம் நடைபெற்றது. இதையொட்டி அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் வரதராஜ பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் வீற்றிருந்தார். பின்பு திருத்தேரை பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து கோவிந்தா கோவிந்தா என்றபடி சென்றனர். இதில் பழனி கோயில் நிர்வாக அதிகாரி பொறுப்பு வெங்கடேசன், கண்காணிப்பாளர்கள் அழகர்சாமி, பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, அரிமா பிரமுகர் சுந்தரம் மற்றும் உள்ளூர் பிரமுகர்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

# மாத தொடக்கத்தில் உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, செப்,. 01–

மாத தொடக்க நாளான இன்று தங்கம் விலை சற்று உயர்ந்துள்ளது. அதன்படி கிராமுக்கு 15 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் 14 ஆயிரத்து 385 ரூபாய்க்கும் சவரனுக்கு 120 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 080–க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 3 நாட்களாக விலை மாற்றமின்றி விற்பனையான வெள்ளி விலை இன்று சற்று குறைந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு 5 ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.255–க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.2 லட்சத்து 55 ஆயிரத்துக்கும் விற்பனையாகிறது.

# அதிமுகவும் நாமும் ஒன்றுதானே: பேரவையில் ஆதவ் அர்ஜுனா!

சென்னை, செப். 01–

அதிமுகவும் நாமும் ஒன்றுதான் என்று சட்டப்பேரவையில் பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசினார்.

சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி. பிரபாகர் தலைமையில் இன்று (செப்.1) காலை 9.30 மணிக்கு அவை கூடிய நிலையில், கேள்வி நேரம் நடைபெற்று வருகிறது. சட்டப்பேரவை கேள்வி நேரத்தின்போது, பூவிருந்தவல்லி தொகுதி எம்எல்ஏ பிரகாசம், “பூவிருந்தவல்லி தொகுதியில் செவ்வாய்பேட்டை ரயில்வே மேம்பாலம் பல ஆண்டுகளாகக் கிடப்பில் உள்ளது. அதை விரைவில் முடித்து தருமாறு



பேரவைத் தலைவர் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய பொதுப்பணித் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, “திருவள்ளூர் நமது மாவட்டம், அங்கு 10–க்கு 10 வென்றுள்ளோம், சட்டப்பேரவை உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும்'' என்றார். இதனிடையே, திருவள்ளூர் மாவட்டத்தின் திருத்தணியில் அதிமுக வென்றுள்ளது என எதிரில் இருந்து குரல் எழுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து பேசிய ஆதவ் அர்ஜுனா, ''10ல் 9 தொகுதிகளைக் வென்றோம், அதுவும் நம்முடையதுதானே, அதிமுக வும் நாமும் ஒன்றுதானே. நமக்கும் எம்.ஜி. ஆர் மற்றும் ஜெயலலிதாவுக்கும் இருக்கும் உறவைக் கூறினேன் என்று '' எனத் தெரிவித்தார். அவர் பேசியதற்கு பேரவைத் தலைவர் உள்பட உறுப்பினர்கள் அனைவரும் சிரித்தனர்.

# சிவகாசி அருகே பூட்டப்பட்ட பட்டாசு கடையில் பயங்கர தீ விபத்து!

சிவகாசி, செப். 01–

சிவகாசி அருகே பூட்டப்பட்டிருந்த ஒரு பட்டாசு கடையில் எதிர்பாராத விதமாக திடீரென பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. கடை பூட்டப்பட்டிருந்த நிலையில், உள்ளே வைக்கப்பட்டிருந்த பட்டாசுகள் ஒன்றன்பின் ஒன்றாக மிகக் கொடூரமாக வெடித்துச் சிதறின. இதனால் கடை முழுவதும் தீப்பற்றி எரிந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.



இந்த விபத்தில் கடையில் இருப்பு வைக்கப்பட்டிருந்த சுமார் 20 லட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டாசுகள் முற்றிலும் வெடித்து சிதறி சாம்பலாகின.

சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர், பல மணி நேரம் போராடி எரியும் தீயைக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். பூட்டப்பட்ட கடை என்பதால் அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது.



# கிருஷ்ண ஜெயந்தி: 6 ராசிகளுக்கு அதிர்ஷ்டம்!



கிருஷ்ணர் அவதரித்த ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி செப்டம்பர் 4, 2026 அன்று நாடு முழுவதும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் சந்திரன் உச்ச வீடான ரிஷபத்திலும், குரு உச்சமான கடகத்திலும், சூரியன் சொந்த வீடான சிம்மத்திலும், சுக்கிரன் சொந்த ராசியான துலாமிலும் சஞ்சரிக்கின்றனர். செவ்வாய்சுக்கிரன் நவபஞ்சம யோகம், சந்திரன்குரு கஜகேசரி யோகம், சுக்கிரனின் மாலவ்ய யோகம் உள்ளிட்ட சுபயோகங்கள் உருவாகின்றன.

**ரிஷபம்:** ரோகிணியில் உச்சம் பெறும் சந்திரனால் மனஅமைதி, குடும்ப மகிழ்ச்சி, பணவரவு, தனதானிய சேர்க்கை, ஆரோக்கிய முன்னேற்றம் கிடைக்கும். எதிர்பார்த்த அல்லது இழந்த பணம் கிடைக்கலாம். கடின உழைப்புக்கு பலன், தொழிலில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

**கடகம்:** உச்சம் பெறும் குரு, சந்திரனால் தொழில், நிதிநிலையில் சாதகமான மாற்றம், வீட்டில் மகிழ்ச்சி, செழிப்பு, தன்னம்பிக்கை அதிகரிப்பு ஏற்படும். மனஅழுத்தம் நீங்கி, தொழிலில் முன்னேற்றம், பணியிடத்தில் மதிப்பு, பதவி மற்றும் சம்பள உயர்வு கிடைக்கலாம்.

**சிம்மம்:** தடைகள் நீங்கி பணியிடத்தில் மதிப்பு, மரியாதை, பணிகளை விரைவாக முடிக்கும் வாய்ப்பு, பதவி மற்றும் ஊதிய உயர்வு, வாழ்க்கையில் நல்ல மாற்றங்கள், குடும்ப மகிழ்ச்சி ஏற்படும்.

**கன்னி:** தொழில், வணிகத்தில் சாதகமான சூழல், புதிய ஒப்பந்தங்கள், லாபம், பணவரவு, தடைப்பட்ட பணிகள் நிறைவு, வெளியூர் மற்றும் வெளிநாட்டு வணிக வாய்ப்புகள் கிடைக்கும்.

**துலாம்:** நிதி முன்னேற்றம், பணியிட அதிர்ஷ்டம், ஊதிய உயர்வு, வெகுமதி, முதலீட்டில் எதிர்கால லாபம், திருமண வாழ்க்கையில் மகிழ்ச்சி, கடின உழைப்புக்கு சிறந்த பலன் கிடைக்கும்.

**தனுசு:** ஆன்மிக ஈடுபாடு, சுபநிகழ்வுகள், பணியில் வெற்றி, காதல்திருமண மகிழ்ச்சி, துணையின் அன்பு, பிள்ளைகள் மூலம் நல்ல செய்தி, பயணங்கள், உயர்கல்வி மற்றும் வெளிநாட்டு வாய்ப்புகளில் நன்மை கிடைக்கும்.

ஈரோடு பெருந்துறை சாலை வாய்க்கால்மேட்டில் உள்ள

# நந்தா தொழில்நுட்ப கல்லூரியின் முதல் ஆண்டு வகுப்புகள் துவக்க விழா!



ஈரோடு, செப். 01–

இளநிலை மற்றும் முதுநிலை முதலாமாண்டு வகுப்புகளின் துவக்க விழாவினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் உறுப்பினர் பானுமதி சண்முகன் மற்றும் தமிழ்நாடு முன்னாள் காவல் துறை இயக்குனர் முனைவர் எம். ரவி ஐ பி எஸ்..,அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்கள்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி.சண்முகன் தலைமையேற்று உரையாற்றுகையில், 18வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தொழில் நுட்பகல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகளும் தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலிடமிருந்தும், தேசிய அங்கீகார வாரியத்திடமிருந்தும் உயரிய தரச்சான்றிதழ் பெற்றுள்ளதில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார். மேலும் எங்களின் முக்கிய குறிக்கோளாக விளங்கும் “அனைவருக்கும் வேலைவாய்ப்பு” என்கிற அடிப்படையில் மாணவர்களை தொழில்துறையின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப தயார் செய்யும் பொருட்டு பல்வேறு வகையான தொழில்முறை பயிற்சிகள், பட்டறைகள் மற்றும் கருத்தரங்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

மாணவர்கள் படிப்பு மற்றும் ஆளுமை மேம்பாட்டில் தங்களது கவனத்தினை முழுமையாக செலுத்தி நல்ல பழக்க வழக்கங்களுடன் ஒழுக்கத்தினை கடைபிடித்து, பெற்றொர்களின் கனவுகளை நினைவாக்க எனது வாழ்த்துக்கள் என்று மாணவ மாணவிகளை வாழ்த்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். நந்தகோபால் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி, பொறியியல் கல்லூரி முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி, பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் ஜீ. மோகன்குமார் மற்றும் நந்தா தொழில் நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் கலந்து கொண்டு முதலாமாண்டு மாணவர்களை வரவேற்று வாழ்த்திப் பேசினார்கள்.இதனை தொடர்ந்து, தமிழ்நாடு காவல்துறை முன்னாள் இயக்குனர் டாக்டர் எம். ரவி சிறப்புரையாற்றினார்.

விழா முடிவில் மனிதநேய துறைத் தலைவர் முனைவர் என். விஜயகுமார் நன்றி கூறினார்.




## தலைமுடி வளரனுமா? தினமும் இதை செய்யாதீங்க!



தலைமுடி அடர்த்தியாகவும் ஆரோக்கியமாகவும் வளர வேண்டும் என்பதற்காக தினமும் எண்ணெய் தேய்ப்பது, அடிக்கடி தலைக்குக் குளிப்பது, பல்வேறு ஹேர்–கேர் பொருட்களை பயன்படுத்துவது போன்றவற்றை பலரும் செய்கின்றனர். ஆனால் அளவுக்கு அதிகமான பராமரிப்பு தலைமுடி மற்றும் உச்சந்தலைக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

முதலில், தலைமுடியை மிகவும் இறுக்கமாகக் கட்டுவதை தவிர்க்க வேண்டும். தினமும் இறுக்கமான போனிடெயில், கொண்டை அல்லது பின்னல் போடுவதால் முடியின் வேர்களில் தொடர்ந்து இழுவை ஏற்பட்டு, முடி உடைதல் மற்றும் முன்பகுதியில் முடி மெலிதல் ஏற்படலாம்.

ஈரமான தலைமுடியை உடனடியாக சீவுவதும் தவிர்க்கப்பட வேண்டும். ஈரமாக இருக்கும்போது முடி எளிதில் நீண்டு உடையக்கூடியதாக இருப்பதால், மெதுவாக துடைத்து சிக்கல்களை கவனமாக அகற்ற வேண்டும்.

ஹேர் டிரையர், ஸ்ட்ரெய்ட்னர், கர்லிங் அயர்ன் போன்றவற்றை அதிக வெப்பத்தில் தினமும் பயன்படுத்துவது முடியை உலரச் செய்து உடையக்கூடியதாக மாற்றலாம்.

அதேபோல், தினமும் எண்ணெய் தேய்ப்பதும், பலமுறை ஷாம்பு பயன்படுத்துவதும் அனைவருக்கும் அவசியமில்லை. தலைமுடியின் தன்மைக்கேற்ப பராமரிப்பு செய்வதே சிறந்தது.

முடி ஆரோக்கியத்திற்கு புரதம் மற்றும் ஊட்டச்சத்துகள் நிறைந்த சமச்சீர் உணவு, போதுமான தண்ணீர் ஆகியவையும் முக்கியம். முடி உதிர்வு தொடர்ந்து அதிகமாக இருந்தால் மருத்துவர் அல்லது தோல் நிபுணரிடம் ஆலோசனை பெறுவது நல்லது. முடி வேகமாக வளர ஒரே ஒரு ‘ட்ரிக்’ தேடுவதைவிட, தலைமுடியை மென்மையாக கையாள்வதே பாதுகாப்பான வழி!

## சினிமா துளிகள்..!

## லண்டனில் த்ரிஷாவுக்கு நேர்ந்த சங்கடம்!



நடிகை த்ரிஷா, திரைப்படப் பணிகளுக்கு இடையே ஓய்வு எடுப்பதற்காக தோழிகளுடன் இங்கிலாந்து சென்றுள்ளார். லண்டனின் பிரபல சைனாடவுன் பகுதியில், கருப்பு நிற ஜம்பர் மற்றும் நீல நிற ஜீன்ஸ் அணிந்து தோழிகளுடன் இயல்பாக நடந்து சென்றார்.

அப்போது அவரை அடையாளம் கண்ட ஒருவர், த்ரிஷாவுக்குத் தெரியாமல் வீடியோ எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். அந்த வீடியோ தற்போது வைரலாகி வருகிறது. த்ரிஷாவின் இயல்பான தோற்றத்தைப் பார்த்து சில ரசிகர்கள் மகிழ்ச்சி தெரிவித்தாலும், மற்றொரு தரப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். பிரபலமாக இருந்தாலும், தனிப்பட்ட நேரத்தை அனுபவிக்கும் ஒருவரை அனுமதியின்றி படம் பிடிப்பது அநாகரீகம் என்றும், அவருடைய தனியுரிமை மதிக்கப்பட வேண்டும் என்றும் பலரும் சமூக வலைத்தளங்களில் கருத்து தெரிவித்துள்ளனர்.

சமீபத்தில் வெளியான ‘கருப்பு’ படத்தின் வெற்றிக்குப் பிறகு த்ரிஷா விடுமுறையை அனுபவித்து வருகிறார். பயணங்களில் ஆர்வம் கொண்ட அவர், நியூயார்க், இத்தாலி, மெக்சிகோ உள்ளிட்ட நாடுகளுக்குச் செல்லும் புகைப்படங்களை அடிக்கடி பகிர்ந்து வருகிறார். நியூயார்க் நகரத்தை தனது “இரண்டாவது வீடு” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போன்பேவில் புதிய வசதி!




இணையவசதி இல்லாமலேயே பணம் அனுப்பும் புதிய வசதியை போன்பே அறிமுகப்படுத்தியுள்ளது. சாதாரணமாக பயன்படுத்தப்படும் பட்டன் போன்களைக் கொண்டும் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளும் வகையில் ‘போன்பே யுபிஐ 123பே’ என்ற சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நாடு முழுவதும் 20 கோடிக்கும் அதிகமானோர் சாதாரண மாடல் மொபைல் போன்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இவர்களுக்கும் யுபிஐ அடிப்படையிலான டிஜிட்டல் பணப் பரிவர்த்தனை சேவைகளை வழங்கும் நோக்கில் இந்த புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## எம்எல்ஏ-க்களின் உடல்நலம் காக்க ரூ. 23 கோடி செலவில் உடற்பயிற்சிக் கூடம்: ஜேசிடி பிரபாகர்!



சென்னை, செப். 01–

சட்டப்பேரவை உறுப்பினர்களுக்காக ரூ. 23 கோடி செலவில் உடற்பயிற்சிக் கூடம் கட்டப்பட்டு வருவதாக பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர் பேசியதாவது, “சட்டப்பேரவை உறுப்பினர் விடுதியில் சில வசதிகளைச் செய்துதர வேண்டும் என முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்றேன். உங்களுக்காக ரூ. 23 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, என்னென்ன தேவையோ தங்குதடையின்றி விரைவாகச் செய்துகொடுக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார். அதற்கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஏறத்தாழ ரூ. 1.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, உடற்பயிற்சி உபகரணங்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

தொகுதி மக்களுக்காகக் கவலைப்படுகிற நீங்கள், உங்கள் உடல்நலத்திலும் கவனம் செலுத்தி, உடற்பயிற்சிக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்” என்று தெரிவித்தார்.

## 3,500 மெகாவாட்டாக குறைந்த மத்திய தொகுப்பு மின்சாரம்... அதிகரிக்கும் தேவையால் தமிழகத்திற்கு நெருக்கடி!



சென்னை, செப். 01–


தமிழகத்திற்கு மத்திய தொகுப்பு மின் நிலையங்களில் இருந்து தினமும் சராசரியாக 5,000 மெகாவாட் மின்சாரம் வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது அது 3,400 முதல் 3,500 மெகாவாட்டாக குறைந்துள்ளது. இதனால், அதிகரித்து வரும் மின் தேவையை பூர்த்தி செய்வதில் தமிழக மின் வாரியத்திற்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நெய்வேலி, திருவள்ளூர் வல்லூர், தூத்துக்குடி, கூடங்குளம், கல்பாக்கம் உள்ளிட்ட இடங்களில் மத்திய அரசின் அனல் மற்றும் அணுமின் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதேபோல் ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா, ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களிலும் மத்திய அரசுக்கு சொந்தமான மின் நிலையங்கள் உள்ளன.


இந்த மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தில் இருந்து தமிழகத்திற்கு தினமும் 7,000 மெகாவாட் மின்சாரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மின் நிலையங்களில் ஏற்படும் பழுது உள்ளிட்ட காரணங்களால், சராசரியாக 5,000 மெகாவாட் மின்சாரம் மட்டுமே தமிழகத்திற்கு கிடைத்து வந்தது.

இந்த நிலையில், தெலுங்கானாவில் உள்ள ராமகுண்டம் மின் நிலையத்தில் பராமரிப்பு பணி நடைபெற்று வருகிறது. மேலும், நெய்வேலி மின் நிலையத்தின் 3 அலகுகளில் பழுது ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, மத்திய தொகுப்பில் இருந்து தமிழகத்திற்கு வழங்கப்படும் மின்சாரம் கடந்த சில நாட்களாக 3,400 முதல் 3,500 மெகாவாட்டாக குறைந்துள்ளது.

தற்போது வெயில் சுட்டெரித்து வரும் நிலையில், தமிழகத்தின் மின் தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதற்கிடையே மத்திய தொகுப்பில் இருந்தும் மின்சாரம் குறைந்துள்ளதால், மின் தேவையை சமாளிப்பதில் தமிழக மின் வாரியத்திற்கு கூடுதல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

## எச்.ராஜாவுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை ரத்து!





சென்னை, செப். 01–

பாஜக மூத்த தலைவர் எச். ராஜாவுக்கு இரு வழக்குகளில் விதிக்கப்பட்ட தலா 6 மாத சிறைத் தண்டனையை சென்னை உயர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை ரத்து செய்தது.

பெரியார் சிலை உடைப்பது, அறநிலைத்துறை அதிகாரிகளின் குடும்பத்தினரை அவதூறாக பேசியது, திமுக எம்பி கனிமொழி குறித்து அவதூறாக பேசியது உள்பட 11 வழக்குகள் எச். ராஜா மீது பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்குகள் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் வழக்குகளை விசாரிக்கும் சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்ற நிலையில், கடந்த 2024 ஆம் ஆண்டு தலா 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிடப்பட்டது.

மேலும், எச். ராஜா தரப்பில் மேல்முறையீடு செய்ய அவகாசம் அளித்து சிறைத் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து சென்னை உயர் நீதிமன்றத்தில் எச். ராஜா தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நடைபெற்று வந்தன. இந்த நிலையில், எச். ராஜாவுக்கு விதிக்கப்பட்ட தலா 6 மாத சிறைத் தண்டனையை ரத்து செய்வதாக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி வி. லட்சுமி நாராயணன் இன்று தீர்ப்பளித்தார்.

## சிமெண்ட் விலை திடீர் உயர்வு..!




சென்னை, செப். 01–

நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களில் பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதன் காரணமாக கட்டுமானப் பணிகள் தற்காலிகமாகக் குறைந்துள்ளன. இதனால் சிமெண்ட் விற்பனை குறையக்கூடும் என்பதைக் கருத்தில் கொண்டு, உற்பத்தியாளர்கள் சிமெண்ட் விலையை உயர்த்தியுள்ளனர்.

கட்டுமானப் பணிகளுக்கு அத்தியாவசியமான மூலப்பொருளான சிமெண்ட், மூட்டைக்கு ரூ.10 உயர்ந்துள்ளதாக கட்டுமானத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தமிழகம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் சில மாதங்களுக்கு முன்பு சிமெண்ட் விலை மூட்டைக்கு ரூ.330 என்ற அளவில் இருந்தது. வளைகுடா நாடுகளில் ஏற்பட்ட பிரச்சினைகளால் எரிபொருள் வரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிமெண்ட் விலை மூட்டைக்கு ரூ.40 வரை உயர்ந்தது.அந்த நேரத்தில் கட்டுமானப் பணிகளுக்கான சிமெண்ட் தேவை அதிகமாக இருந்ததால், விலை உயர்வை மக்கள் ஏற்றுக்கொண்டனர்.

இதனிடையே, வளைகுடா நாடுகளில் போர் பதற்றம் ஓரளவு தணிந்ததைத் தொடர்ந்து, சில சிமெண்ட் உற்பத்தியாளர்கள் விலையைக் குறைக்கத் தொடங்கினர். இதனால், நாடு முழுவதும் சிமெண்ட் விலை மூட்டைக்கு ரூ.342 என்ற அளவுக்கு குறைந்தது. இந்நிலையில், தற்போது மீண்டும் சிமெண்ட் விலை மூட்டைக்கு ரூ.10 உயர்ந்துள்ளது.

## வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விலை உயர்வு!



சென்னை, செப். 01–

இன்று மாதத்தின் முதல் நாள் என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி சென்னையில் வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலை உயர்ந்துள்ளது.

பாரத், இந்துஸ்தான், இந்தியன் ஆயில் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் வீடுகளுக்கு 14.20 கிலோ எடையிலும், வணிக பயன்பாட்டுக்கு 19 கிலோ எடையிலும், சமையல் கியாஸ் சிலிண்டர்களை நாடு முழுவதும் வினியோகம் செய்து வருகின்றன.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை நிர்ணயித்து வருகின்றன. இதில் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகின்றன. இந்த நிலையில், இன்று மாதத்தின் முதல் நாள் என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை ரூ.10.50 உயர்ந்து, ரூ.2,916.50–க்கு விற்பனை செய்யப்படுகிறது. 14.2 கிலோ எடை கொண்ட வீட்டு உபயோக சிலிண்டர் விலையில் எந்தவித மாற்றமுமின்றி ரூ.957.50–க்கு விற்பனையாகிறது.

## 4 மாதங்களில் டாஸ்மாக் மூலம் ரூ. 17,854 கோடி வருவாய்!



சென்னை, செப். 01–

தமிழக அரசுக்கு டாஸ்மாக் மூலம் கடந்த 4 மாதங்களில் ரூ. 17.8 ஆயிரம் கோடி வருவாய் கிடைத்துள்ளது.

தமிழக அரசின் டாஸ்மாக் நிறுவனம், சில்லரை விற்பனைக் கடைகள் மூலம் மதுபானங்களை விற்பனை செய்து வருகிறது. இவற்றின் மீது ஆயத்தீர்வை மற்றும் மதிப்புக் கூட்டு வரி போன்றவை விதிக்கப்படுகிறது. இதன் மூலம் அரசுக்கு வருவாய் கிடைக்கிறது.

இதன்படி, நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூலை வரையிலான 4 மாதங்களில் ஆயத்தீர்வை மூலம் ரூ. 4,065.75 கோடியும், மதிப்புக் கூட்டு வரி மூலம் ரூ. 13,788.89 கோடியும் கிடைத்துள்ளது. மொத்தமாக தமிழக அரசுக்கு கடந்த 4 மாதங்களில் டாஸ்மாக் மூலம் ரூ. 17,854.63 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

மாநிலத்தில் மதுவிலக்கை அமல்படுத்த பல கட்சிகளும் தொடர்ந்து வலியுறுத்தி வரும்நிலையில், தமிழகத்தில் மதுவிலக்கு சாத்தியமன்று என்று சட்டப்பேரவையில் அமைச்சர் விக்னேஷ் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

## வேலை வாய்ப்பு





Indian Space Research Organisation (ISRO) சார்பில் Scientist/Engineer ‘SC’ பதவிகளுக்கு 175 காலிப்பணியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

| விவரம் | தகவல் |
|---|---|
| நிறுவனம் | இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) |
| அறிவிப்பு எண் | ISRO:ICRB:03(EMC):2026 |
| பணிப்பிரிவு | மத்திய அரசு பணி |
| பதவி | Scientist/Engineer ‘SC’ |
| காலிப்பணியிடங்கள் | 175 |
| பணி நியமனம் | நிரந்தர அடிப்படையில் |
| பணியிடம் | இந்தியா முழுவதும் |
| விண்ணப்பம் தொடக்கம் | 27.08.2026 |
| விண்ணப்பிக்க கடைசி நாள் | 16.09.2026 |
| விண்ணப்ப முறை | ஆன்லைன்– https://www.isro.gov.in/ அதிகாரப்பூர்வ இணையதளம் |
| ISRO அதிகாரப்பூர்வ இணையதளம் | |

**முக்கிய குறிப்பு:** விண்ணப்பிப்பதற்கு முன் கல்வித் தகுதி, வயது வரம்பு, இடஒதுக்கீடு, தேர்வு முறை மற்றும் விண்ணப்பக் கட்டணம் போன்ற முழு விவரங்களையும் அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்க்கவும்.

## ரேஷன் கடைகளில் கோதுமை மாவு கிலோ ரூ.15-க்கு விற்க தமிழக அரசு முடிவு!





சென்னை, செப். 01–

ரேஷன் கடைகளில், குடும்ப அட்டைதாரர்களுக்கு கோதுமை மாவு, கிலோ ரூ.15–க்கு வழங்க, தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

வெளிச்சந்தையில், கோதுமை மாவு விலை சராசரியாக, ரூ.60 வரை உள்ளது. விலை உயர்வை கட்டுப்படுத்த, இரு ஆண்டுகளுக்கு முன் மத்திய அரசு, ‘பாரத் ஆட்டா’ என்ற பெயரில், கிலோ, ரூ.27.50–க்கு கோதுமை மாவு விற்கும் திட்டத்தை தொடங்கியது. இத்திட்டத்தில், தமிழகத்தில் முக்கிய இடங்களில் உள்ள கூட்டுறவு அங்காடிகளில், கோதுமை மாவு விற்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த மாதம் 5–ந்தேதி தாக்கல் செய்யப்பட்ட தமிழக பட்ஜெட்டில், ‘பொது வினியோக திட்டத்தில் பாக்கெட்டில் கோதுமை வழங்கும் முன்னோடி திட்டம் செயல்படுத்தப்படும்’ என, தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, கோதுமை மாவு, கிலோ ரூ.15–க்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து, கூட்டுறவு மற்றும் உணவுத்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, “மத்திய அரசிடம் இருந்து கோதுமை வாங்கி, ஆலைகளில் மாவாக அரைத்து, பாக்கெட்டில் வழங்கப்பட உள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் கோதுமை மாவு என்ன விலைக்கு வழங்கப்படுகிறது என்று, ஆய்வு செய்யப்படுகிறது. அதை விட குறைவாக, கிலோ ரூ.15–க்கு வழங்க திட்டமிட்டுள்ளோம்” என்று கூறினார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்

## 52 முதுநிலை திருக்கோயில்கக்கு கைப்பேசி தடை!



# தாய்மாமன் தங்க மோதிர திட்டம்: கணக்கெடுக்கும் பணி தீவிரம்!

கோவை, செப். 01–

தமிழகத்தில் புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு தாய்மாமன் தங்க மோதிர திட்டத்தை வருகிற 15–ந் தேதி அண்ணா பிறந்த நாள் முதல் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது. அரசு ஆஸ்பத்திரிகளில் பிரசவத்தை ஊக்குவிப்பதும், தாய்மாமன் சீராக குழந்தைகளுக்கு தங்கம் வழங்கும் பாரம்பரிய பண்பாட்டை போற்றும் வகையிலும் செயல்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது.



இதில் அரசு ஆஸ்பத்திரிகளில் பிறக்கும் பச்சிளம் குழந்தைகளுக்கு 22 கேரட் 916 தரத்துடன் கூடிய 1 கிராம் தங்க மோதிரம் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்திற்காக அரசு ரூ.755.83 கோடி ஒதுக்கீடு செய் துள்ளது. டெண்டரும் 2நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்துக்காக ஆண்டுக்கு 4 லட்சத்து 41 ஆயிரத்து 667 தங்க மோதிரங்களை வாங்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதுதொடர்பாக கோவை மாவட்ட சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறும்போது, கோவை மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் 22–ந் தேதி முதல் பிறந்த குழந்தைகள் கணக்கெடுக்கப்பட்டு உள்ளன. கோவை மாநகர் மற்றும் புறநகர் என அனைத்து பகுதிகளிலும் கணக்கெடுப்பு பணிகள் நடந்து வருகிறது. தற்போது வரை 1,200 குழந்தைகள் இந்த திட்டத்தில் பயன்பெற உள்ளனர்.

வருகிற 15–ந் தேதி திட்டம் தொடங்கும்போது, கோவை அரசு ஆஸ்பத்திரி, பொள்ளாச்சி மற்றும் மேட்டுப்பாளையம் அரசு ஆஸ்பத்திரிகளில் இந்த திட்டத்தை அமைச்சர்கள் தொடங்கி வைக்க உள்ளனர். முதற்கட்டமாக வருகிற 14–ந் தேதி தொடர்ந்து கணக்கெடுக்கப்பட்டு, திட்டம் தொடங்கிய பிறகு அனைத்து பயனாளர்களுக்கும் வழங்கப்படும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# ஈரானில் புதுவித தாக்குதலில் ஈடுபட்ட அமெரிக்கா...!

நியூயார்க், செப். 01–

அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் இணைந்து ஈரான் மீது கடந்த பிப்ரவரி 28–ந்தேதி திடீரென வான்வழியாக தாக்குதலை நடத்தின. இதில் ஈரானின் உச்சபட்ச தலைவராக இருந்த அயதுல்லா அலி காமேனி, அவரது குடும்பத்தினர் மற்றும் முக்கிய அதிகாரிகள் என ஆயிரக்கணக்கானோர் பலியானார்கள். இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்தது.



இதனால் மேற்காசிய பகுதியில் கடந்த 6 மாதங்களாக பதற்ற நிலை நீடித்து வருகிறது. இந்நிலையில், மோதலின்போது, ஈரான் மீது அமெரிக்க ராணுவம் புதிய வகை ஏவுகணை தாக்குதலை முதன்முறையாக பயன்படுத்தி இருப்பது தெரிய வந்துள்ளது.

இந்த ஏவுகணையானது, நீண்ட தொலைவு இலக்கை, துல்லியத்துடன் தாக்கும் தன்மை கொண்டது. பொதுவாக ஏவுகணை என்றால், இந்த வகையையே சார்ந்திருக்கும். அது தாக்கும் பகுதியில் உள்ள இடங்கள், கட்டிடங்களை சேதப்படுத்தும். அந்த பகுதியிலுள்ள மக்களையும் படுகொலை செய்யும்.

ஆனால், அமெரிக்காவின் லாக்ஹீட் மார்டின் வகை ஏவுகணையானது புதுவித தாக்குதலில் ஈடுபட்டு உள்ளது. பிற ஏவுகணைகளை விட வேறுபட்ட தன்மை கொண்டது. இந்த ஏவுகணை தாக்குதலின்போது பரவலாக வெடிகுண்டு சிதறல்களை ஏற்படுத்தும். அது கோடிக்கணக்கான துண்டுகளாக உடைந்து, பரவி பாதிப்பு ஏற்படுத்தும்.

இதனால், ஏவுகணை தாக்கிய பகுதியில் இருந்து 50 மீ தொலைவில் உள்ள மக்களும் பலியாகி உள்ளனர் என்ற அதிர்ச்சி தகவல் தெரிய வந்துள்ளது. இந்த வகை ஏவுகணையை ஈரான் மீது அமெரிக்கா முதன்முறையாக செலுத்தி உள்ளது தெரிய வந்துள்ளது என்று ஏர்வார்ஸ் என்ற அமைப்பும் மற்றும் பாதுகாப்பு நிபுணர்களும் தெரிவித்து உள்ளனர்.

இதன்படி, ஈரானின் லாமெர்ட் நகர் மீது 3 ஏவுகணைகள் தாக்கின. அது வெடித்த இடத்தில் இருந்து 50 மீட்டர் தொலைவு வரையிலான பகுதிகளில் வசித்த மக்கள் உயிரிழந்து உள்ளனர். அதனுடன், 3 மடங்கு தொலைவிலான பகுதிகளிலும் சேதம் ஏற்படுத்தி உள்ளது. இந்த தாக்குதலின்போது, 7 குழந்தைகள் உள்பட 21 பேர் பலியானார்கள்.

# நேபாள பேரிடர் பலி எண்ணிக்கை 962 ஆக அதிகரிப்பு: 4,500 பேரின் கதி?

காத்மாண்டு, செப் 01–

நேபாளத்தில் இமயமலை பிராந்தியத்தில் உற்பத்தியாகி தெற்கு நோக்கி பாயும் போடே கோஷி ஆற்றில் கடந்த 26–ந்தேதி ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு நாட்டின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளை முற்றிலும் நிர்மூலமாக்கி இருக்கிறது. சாலைகள், பாலங்கள், வாகனங்கள், கட்டிடங்கள், செல்போன் கோபுரங்கள் என அனைத்து கட்டமைப்புகளும் வெள்ளத்துக்கு இரையாகி உள்ளன.



மேலும் ஆற்றின் போக்கில் உள்ள நகரங்கள், கிராமங்கள் அனைத்தும் சின்னாபின்னமாகி இருக்கும் நிலையில் அங்கு வசித்த மக்கள் ஆயிரக்கணக்கில் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு உள்ளனர். உள்ளூர்வாசிகள் மட்டுமின்றி, இந்தியா உள்பட பல்வேறு வெளிநாடுகளில் அங்கு இருந்து சுற்றுலா சென்றிருந்த நூற்றுக்கணக்கான மக்களும் வெள்ளத்தில் சிக்கி காணாமல் போயிருக்கிறார்கள். இவ்வாறு வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டவர்களில் பலர் உயிரிழந்திருப்பது அடுத்தடுத்து மீட்கப்படும் பிணங்கள் மூலம் உறுதி செய்யப்படுகிறது.

அந்தவகையில் நேற்றும் நூற்றுக்கும் மேற்பட்டோரின் உடல்கள் ஆங்காங்கே மீட்கப்பட்டன. இதன்மூலம் இந்த பேரிடருக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 962 ஆக உயர்ந்துள்ளது.

மாயமான இந்த தொழிலாளர்களை தேடும் பணிகள் முடுக்கி விடப்பட்டு உள்ளன. அவர்கள் பணியாற்றி வந்த சுரங்கங்களின் வாயில்கள் சேறு சகதியால் மூடியிருப்பதால் மீட்புப்பணிகள் பெரும் சவாலாக மாறியிருக்கிறது. எனவே இந்தியாவில் இருந்து சென்றுள்ள சுரங்க மீட்பு நிபுணர்கள் உதவியுடன், சுரங்கங்களில் மூடியிருக்கும் சேறு சகதிகளை நீக்கி வழி ஏற்படுத்தும் பணிகள் முடுக்கி விடப்பட்டு உள்ளன.

முன்னதாக அப்பர் திரிசூலி–1 மற்றும் லாங்டாங் கோலா பகுதிகளில் உள்ள சுரங்கங்களில் சிக்கியிருந்த 279 பேர் மீட்கப்பட்டனர்.

இந்த பணிகளில் நேபாள ராணுவ என்ஜினீயர்கள் நவீன தளவாடங்களுடன் மீட்புப்பணிகளை 24 மணி நேரமும் மேற்கொண்டு வருகின்றனர். இதில் அப்பர் திரிசூலி–3ஏ பகுதியில் மட்டும் 90 பேர் அடங்கிய குழுவினர் ஈடுபட்டுள்ளதாக நேபாள பிரதமர் அலுவலகம் கூறியுள்ளது. இதற்கிடையே திபெத்திலும் வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட சுமார் 550 பேர் கதி என்ன என்று தெரியவில்லை.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் நடந்து வருகின்றன. 6 நாட்களாக நடந்து வரும் இந்த மீட்புப்பணிகளில் இதுவரை 9,500 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு உள்ளனர்.

இதில் இந்தியா, சீனா, ரஷியா, இங்கிலாந்து உள்பட பல்வேறு வெளிநாடுகளை சேர்ந்த சுற்றுலாப்பயணிகளும் கணிசமாக மீட்கப்பட்டு உள்ளனர்.

நேபாளத்தில் நடந்து வரும் இந்த மீட்புப்பணிகளில் இந்தியாவை சேர்ந்த பல்துறை நிபுணர்களும் தீவிரமாக பணியாற்றி வருகின்றனர்.

இதில் இடம்பெற்றுள்ள தடயவியல் நிபுணர்கள், மீட்கப்பட்டு வரும் உடல்களில் அடையாளம் காண முடியாத அளவுக்கு சிதைந்திருப்பவற்றில் மரபணு சோதனைகளை நடத்தி வருகின்றனர். இவ்வாறு மரபணு சோதனை முடித்தபின் அவை மொத்தமாக ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு மீட்கப்படும் உடல்கள் பெரும்பாலும் ஒரே இடத்தில் அடக்கம் செய்யும் நிகழ்வுகள் அதிகரித்து வருகிறது. நேபாள பேரிடர் நிகழ்ந்து 6 நாட்களை கடந்த பின்னரும் சுமார் 4,500 பேரின் கதி என்ன? என்று தெரியாததால் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# 7.8 சதவீதம் ஜி.டி.பி. வளர்ச்சி மோடியின் தலைமைக்கு சாட்சி; அமித்ஷா!

புதுடெல்லி. செப். 01–

7.8 சதவீதம் ஜி.டி.பி. வளர்ச்சி மோடியின் தலைமைக்கு சாட்சி என அமித்ஷா புகழாரம் தெரிவித்து உள்ளார்.

நடப்பு 2026–27 நிதி ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.8 சதவீதம் என்ற அளவில் உள்ளது என அறிக்கை தெரிவிக்கின்றது.

இதுபற்றி மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா எக்ஸ் சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில், பிரதமர் மோடி அரசின் கீழ் இந்திய பொருளாதாரம் நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. உலகளாவிய நிச்சயமற்ற சூழலை இந்திய பொருளாதாரம் ஆனது, மீண்டும் வெற்றி கொண்டு, 2026–27 நிதி ஆண்டின் முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.8 சதவீதம் என்ற அளவில் உள்ளது. பிரதமர் மோடி யின் தொலைநோக்கு பார்வை கொண்ட தலைமைக்கான உறுதியான சான்றாக இது உள்ளது. சர்வதேச அளவில் கடுமையான புயல் வீச கூடிய அளவில் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டபோதும், நம்முடைய நாடு அவற்றில் இருந்து உறுதியுடன் மீண்டு வெற்றி பெறும் வகையில், பிரதமர் மோடியின் தொலைநோக்கு பார்வை கொண்ட தலைமை உள்ளது.



இந்த குறிப்பி டத்தக்க சாதனைக்காக, ஒவ்வொரு குடிமகனுக்கும் என்னுடைய இதயம் கனிந்த வாழ்த்துகளை கூறிக்கொள்கிறேன் என பதிவிட்டு உள்ளார்.

# காலை உணவுத் திட்டம் 9 முதல் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

சென்னை, செப். 01–

காலை உணவுத் திட்டத்தை 9 முதல் 12–ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் விரிவுபடுத்துவது குறித்து தமிழக அரசு கருத்து தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கடந்த தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட முதல்–அமைச்சர் காலை உணவுத் திட்டம், தற்போது காமராஜர் காலை உணவுத் திட்டம் என்ற பெயர் மாற்றத்துடன் 6 முதல் 8–ம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும் வரும் 17–ந் தேதி முதல் விரிவுபடுத்தப்பட உள்ளது.



இந்த திட்டத்தை விருதுநகரில் காமராஜர் படித்த தொடக்கப் பள்ளிக்கே நேரில் சென்று முதல்–அமைச்சர் ஜோசப் விஜய் தொடங்கிவைக்க இருக்கிறார்.

இந்த நிலையில், கோவையை சேர்ந்த சி.ஐ.டி.யு. பொதுச் தொழிலாளர் சங்கத்தின் பொது செயலாளர் எஸ். பாஷா என்பவர், தமிழக அரசின் சமூக நல இயக்குநரகத்திற்கு கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

அதில், "காமராஜர் காலை உணவுத் திட்டம் 9 முதல் 12–ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். குறிப்பாக, 10 மற்றும் 12–ம் வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் பொதுத்தேர்வுகளை எதிர்கொள்ளும் நிலையில், அவர்களின் உடல் மற்றும் மனநலத்திற்கும், கவனச் செலுத்தல் மற்றும் கல்விச் செயல்திறனுக்கும் போதிய ஊட்டச்சத்து அவசியமானதாகும்" என்று அவர் தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு தமிழக அரசின் சமூக நல இயக்குநரகத்தின் கூடுதல் இயக்குநர் கா.பொற்கொடி பதில் அனுப்பியுள்ளார். அதில், "தங்களின் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள அவர், 9 முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கும் விரிவுபடுத்துவது குறித்த தங்களது கோரிக்கை அரசுக்கு தெரிவிக்கப்படும்" என்று கூறியுள்ளார்.

# தாய்நாட்டு விடுதலைக்காக போராடிய மாவீரன் பூலித்தேவனின் புகழ் என்றும் நிலைத்திருக்கட்டும்: முதல்-அமைச்சர் விஜய்!

சென்னை, செப். 01–

இந்திய சுதந்திர போராட்ட வீரர் பூலித்தேவனின் 311–வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில் பூலித்தேவன் பிறந்தநாளை முன்னிட்டு முதல்–அமைச்சர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:–



ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் தமிழக மண்ணில் முதல் இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு முன்னதாகவே துணிச்சலுடன் களம் கண்ட விடுதலைப் போராட்ட வீரரும், நெற்கட்டும்செவல் பாளையக்காரருமான மாவீரன் பூலித்தேவனின் பிறந்தநாளில், அவரைப் போற்றிப் பெருமிதத்துடன் நினைவுகூர்கிறேன்.

அடிமைத்தனத்தை ஏற்க மறுத்து, அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராகத் தனது இறுதி மூச்சுவரை அஞ்சாது போராடிய அவரது வீரமும், தாய்மண் மீதான பற்றும், சுயமரியாதை உணர்வும் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்றுள்ளன. தாய்நாட்டு விடுதலைக்காகத் தன்னலமின்றிப் போராடிய மாவீரன் பூலித்தேவனின் புகழ் என்றும் நிலைத்திருக்கட்டும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# எங்களின் இலக்கிய வளத்தை அழிக்க நினைக்கிறது ரஷ்யா.!! உக்ரைன் பகீர் குற்றச்சாட்டு!

கீவ் , செப். 01–

ரஷ்யாவின் ஏவுகணை தாக்குதலில் லட்சக்கணக்கான புத்தகங்கள் எரிந்து சாம்பலாகி இருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்த தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள உக்ரைன், தங்களின் இலக்கிய வளத்தை ரஷ்யா அழிக்க நினைப்பதாக குற்றம்சாட்டி உள்ளது.



உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா நடத்திய தொடர் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களில் சுமார் 1.2 கோடி (12 மில்லியன்) புத்தகங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக உக்ரைனில் இருந்து வெளிவரும் அதிகாரப்பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன. புதிய கல்வி ஆண்டு தொடங்கவிருந்த நிலையில் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பேசி இருக்கும் உக்ரைன் அதிகாரிகள், தங்கள் நாட்டின் தலைநகர் கீவ் மற்றும் கார்கிவ் ஆகிய பகுதிகளில் உள்ள பிரபல புத்தகச் சந்தைகள், அச்சுக்கூடங்கள் மற்றும் புத்தகக் கிடங்குகளைக் குறிவைத்து ரஷ்யா இந்தத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக குற்றம்சாட்டி உள்ளனர். சேதமடைந்த புத்தகங்களில் பள்ளிக் குழந்தைகளுக்காகப் புதிதாக அச்சிடப்பட்ட லட்சக்கணக்கான பள்ளிப் பாடப்புத்தகங்களும் அடங்கும்.

குறிப்பாக கீவ் நகரின் புறநகரில் உள்ள ஒரு முக்கிய அச்சகத்தில் மட்டும், மாணவர்களுக்கு விநியோகிக்கத் தயாராக இருந்த உக்ரைனின் ஒட்டுமொத்தப் பாடப்புத்தக தேவையில் 10% புத்தகங்கள் (சுமார் 12 லட்சம் புத்தகங்கள்) எரிந்து சாம்பலாகியுள்ளதாக கூறப்படுகிறது. ரஷ்யாவின் தாக்குதல்களால் உக்ரைனில் 35–க்கும் மேற்பட்ட பதிப்பகங்கள் மற்றும் விநியோக மையங்கள் மிக கடுமையாகச் சேதமடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# அனிதா நினைவேந்தல் கூட்டத்திற்கு அனுமதி மறுப்பு ஏன்? காரசார வாதம்!

சென்னை, செப். 01–

அனிதாவின் 9–ம் ஆண்டு நினைவேந்தல் கூட்டத்திற்கு அரசு அனுமதி மறுத்த விவகாரம் தொடர்பாக சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கும், அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்கும் இடையே காரசார விவாதம் நடைபெற்றது. அப்போது உதயநிதி ஸ்டாலின் பேசுகையில், "தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு மற்றும் அனிதாவின் குடும்பம் சார்பில் அமைதியான நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு ஏன் அனுமதி வழங்கவில்லை. பெசன்ட் நகர் வேளாங்கண்ணி ஆலய கொடியேற்றம் ஏற்கனவே நடந்து முடிந்துவிட்ட சூழலில், ஜனநாயக ரீதியில் அமைதியாக நடைபெற இருந்த அனிதாவின் நினைவேந்தல் கூட்டத்துக்கு அரசு அனுமதி கொடுக்காதது ஏன்?.



பெசன்ட் நகர் மாதா கோவில் கொடியேற்றத்தைக் காரணம் காட்டி அனிதாவின் 9ம் ஆண்டு நினைவேந்தல் கூட்டத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டு உள்ளது. ஆனால், அங்கு அந்த அளவில் கூட்டம் இல்லை; உடனடியாக அனுமதி வழங்க வேண்டும். அல்லது மாற்று இடத்தை கொடுக்க வேண்டும். அனிதா மரணத்தை வைத்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் தனக்கு இல்லை" என்று தெரிவித்தார்.

அதற்கு பதில் அளித்து பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, "சட்டம் – ஒழுங்கு பிரச்சினைகளை கருத்தில் கொண்டே அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதில் எந்தவித அரசியலும் இல்லை. எனினும், நினைவேந்தல் கூட்டத்தை நடத்துவதற்கு ஏதுவான மாற்று இடத்தை தேர்வு செய்ய அரசு தரப்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர், "இன்றைய நாள் தங்கை அனிதா நினைவு நாள். தன்னுடைய கோரிக்கைக்காக சுப்ரீம்கோர்ட்டு வரை சென்று கோரிக்கை நிறைவேறாததால் உயிரிழந்தார். 3 மாநில முதல்வர்கள் நீட்டுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியும் மத்திய அரசு நீக்கவில்லை.

வரக்கூடிய காலங்களில் தேர்தல் சூழ்நிலை மாறும் நிலையில், உறுதியாக மாறும். 2029ல் தேர்தல் சூழ்நிலை மாறும் போது, சட்டமன்றத்தில் ஒலித்த குரல், பாராளுமன்றத்தில் நீட் தூக்கி எறியப்படும் நாளாக மாறும். அனிதாவின் தியாகம், கண்ணீர், உழைப்பு, உணர்வு நிறைவேறும்" என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்தார்.

முன்னதாக அனிதாவின் நினைவு நாள் நினைவேந்தலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து எதிர்கட்சி தலைவர் உதயநிதி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, தன் பேச்சின் நிறைவில், "அனிதாவின் நினைவு நாளான இன்றாவது, அரசியல் செய்ய வேண்டாம்" என கூற, திமுகவினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

உடனே குறிக்கிட்ட சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், "அரசின் கவனத்திற்கு எதிர்கட்சி தலைவர் கொண்டு வந்துள்ளார், அத்தோடு அதை முடித்துவிடவும்" என்று அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவுக்கு அறிவுரை வழங்கினார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020